மாகாணத் திறைசேரி ~ வடமாகாணம்

Provincial Treasury – Northern Province

පළාත් භාණ්ඩාගාරය ’ උතුරු පළාත


My No:-NP/09/FRM/ 2009 Date:- 27.11.2009

**மாகாண திறைசேரி சுற்று நிருப இல:- PT/22/2009**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிற்கு மீளக்கடமைக்குத் திரும்பும் மாகாண அரசாங்க அலுவலர்களிற்கு/ ஊழியர்களிற்கு உரித்தான இணைந்த படிகள்**

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவதனால் அங்குள்ள அலுவலகங்களில் கடமையாற்றி தற்போது தற்காலிகமாக வேறு மாவட்டங்களில் கடமையாற்றும் அலுவலர்களை மீண்டும் தத்தமது அலுவலகங்களிலேயே கடமையாற்றுமாறு கௌரவ ஆளுனர்-வ. மா அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைவாக தத்தமது அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களிற்கு.'. ஊழியர்களிற்கு கௌரவ ஆளுனர்-வ.மா அவர்களின் அறிவுறுத்தலிற்கிணங்க இணைந்தபடிகள் வழங்கப்படவுள்ளன.

இக் கொடுப்பனவை வழங்கும் போது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

1. இவ் அலுவலர்களின் வரவு பிராந்திய அலுவலகங்களின் தலைமை அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் அவசியம் ஆகும்.
2. கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களில் நிரந்தரமாகத் தங்கியிருந்து கடமையாற்றும் அலுவலர்களிற்கு/ஊழியர்களிற்கு இணைந்தபடிக் கொடுப்பனவு முழுமையானதாக வழங்கப்படல் வேண்டும்.
3. அதேசமயம் அவ்வாறு நிரந்தரமாகத் தங்கியிராது, வேறு மாவட்டங்களிலிருந்து தினமும் கடமைக்கு வந்து செல்லும் அலுவலர்கள்.'.ஊழியர்களாயின் இணைந்தபடியின் அரைப்பங்கு வழங்கப்பட வேண்டும்.
4. மேலும் அலுவலர்களிற்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமையால் அவர்கள் பிரயாணத்திற்காகச் செலவிடும் நேரத்தை இணைந்தபடிக் கொடுப்பனவு வழங்கும்போது கருத்திலெடுக்கப்படலாகாது.

இச் சலுகையானது 23.11.2009ம் திகதி முதல் 31.12.2009ம் வரை வழங்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்

**அ.மனோரஞ்சன்,**
**பிரதிப் பிரதம செயலாளர் -நிதி.**
**பிரதம செயலாளருக்காக.**

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வமா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொதுநிர்வாகம் - வமா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வமா
4. பணிப்பாளர் - மாகாணக் கணக்காய்வு – வமா

} தகவலுக்காக


Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.

Phone No. DCS(F) Direct 026-2226974 Mobile – 077-3868570 General No – 026 – 3266503
Fax - 026 – 2226953 E-Mail – nptreasury@sltnet.lk